| | | |
|---|---|---|
| சாட்சி : PW 2<br>குழந்தைதெரஸ் | அ.வ.எண்.92/2016 | 20.02.2024 |

<u>குறுக்கு விசாரணை</u>

1) தாவா சொத்தின் புல எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி எனது மகன் என்றால் சரிதான். எனக்கு 1 மகன் 4 மகள்கள் வாரிசுகள் என்றால் சரிதான். வா.சா.ஆ.26 கிரைய ஆவணத்தில் என்னென்ன சொத்துக்கள் கட்டுப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் சர்வே எண் மனபாடமாக எனக்கு தெரியாது. வா.சா.ஆ.26 ஆவணத்தில் கண்ட சொத்துக்கள் யாரிடம் இருந்து எனது கணவர் கிரையம் பெற்றார் என்றால் எனது மாமா சவரிமுத்து அவரது மனைவி மற்றும் மகன்களிடம் இருந்து கிரையம் பெற்றார். எனது கணவர் கோத்தாரி கரும்பு ஆலையில் கரும்பு ஆய்வாளராக பணிபுரிந்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.26 ஆவணத்தில் கண்ட சொத்தை கிரையம் பெறும் பொது கிரைய தொகையை எனது கணவர் தான் கொடுத்து கிரையம் பெற்றார் என்றால் சரிதான். வா.சா.ஆ.26 ஆவணத்தில் உள்ள சொத்தை எவ்வளவு தொகை கொடுத்து கிரையம் பெற்றார் என்றால் எனது கணவருக்கு தான் தெரியும். வா.சா.ஆ.26 கிரைய ஆவணத்தில் உள்ள சொத்துக்களை கிரையம் பெறும் போது நான் வீட்டுகுடித்தனம் தான் செய்து வந்தேன் என்றால் சரிதான். எனது கணவர் எந்த ஆண்டு இறந்தார் என்றால் 2011 ஜீன்.15 அன்று இறந்தார். வா.சா.ஆ.26 கிரைய ஆவணத்தில் கண்ட சொத்தை கிரையம் பெற்ற பிறகு அதில் உள்ள சொத்துக்களை எனது கணவர் தான் சாகுபடி செய்து வந்தார் என்றால் நான் தான் சாகுபடி செய்து வந்தேன். எனது கணவர் இறந்த பிறகு வா.சா.ஆ.26 ல் ஆவணத்தில் கண்ட சொத்துக்களை பொறுத்து எனக்கும் எனது மகன் மற்றும் மகள்களுக்கு இடையே எந்த பாகப்பிரிவினையும்

செய்யவில்லை என்றால் சரியல்ல, எனது மகன் ஜார்ஜ் எட்மண்ட் பெலிக்ஸ் க்கு பாகம் பிரித்து கொடுத்தேன்.

2) எனது மகனுக்கு பாகம் பிரித்து கொடுத்ததை பொறுத்து எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான், எனது மகனுக்கு கொடுத்த அவரது பாகத்தை விற்பனை செய்துவிட்டார். எனது மகனுக்கு எந்த தேதி, மாதம், வருடம் எந்த சர்வே எண்ணில் கட்டுப்பட்ட சொத்தை கொடுத்தோம் என்று என்றால் சொல்லமுடியுமா என்றால் அதுபற்றி எனக்கு நியாபகம் இல்லை. வா.சா.ஆ.26 ஆவணத்தில் கண்ட சொத்தில் 1ம் பிரதிவாதிக்கும் பாகம் உண்டா என்றால் ஏற்கனவே 1ம் பிரதிவாதிக்கு நாங்கள் பாகம் கொடுத்துவிட்டோம். நான் 1ம் பிரதிவாதிக்கு பாகம் பிரித்து கொடுத்துவிட்டேன் என்பதை நிரூபணம் செய்ய நீதிமன்றத்தில் நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நானும் எனது மகன்களும் வாதிக்கு 14.08.2015 அன்று எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.5 ஆவணத்தில் 6ல் 5 பாகத்தை வாதிக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் பிரிக்கப்படாத சொத்தில் தான் 6 ல் 5 பாகத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு நான் உண்மையில் பாகம் பிரித்து கொடுத்திருந்தால் மேற்படி விபரத்தை வா.சா.ஆ.5 ஆவணத்தில் குறிப்பிட்டிருப்பேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் பிரிக்கப்படாத பாகத்தை ஒதுக்கிவிட்டு தான் வாதிக்கு வா.சா.ஆ.5 ஆவணம் கிரையம் செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரிதான்.

3) வா.சா.ஆ.5 ஆவணத்தில் கண்ட சொத்துக்களை பொறுத்து பாதி பாகத்தை நான் கிரையம் செய்து கொடுத்தாகவும் மீதமுள்ள பாகத்தை 6 ல்

5 பாகத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளதாகவும் சொல்வது தவறானது என்றால் சரியல்ல. எனக்கு மனைவி என்ற முறையில் 6 ல் 1 பங்கு தான் எனக்கு பாத்தியம் என்றாலும், 1ம் பிரதிவாதியின் பாகத்தையும் சேர்த்து நான் எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.5 கிரைய ஆவணம் 1ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.26 ஆவணத்தின்படி கிரைய தொகை முழுவதையும் எனது கணவர் கொடுத்து வாங்கிய காரணத்தினால் வா.சா.ஆ.26 ல் கண்ட சொத்துக்களில் வாரிசுமுறைபடி 6 ல் 1 பங்கு மட்டுமே எனக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.22 ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது மாமியார் இருதயமேரிக்கு பாத்தியப்பட்டது. எனது மாமியார் இருதயமேரி எந்த ஆண்டு இறந்தார் என்றால் 1992 ல் இறந்தார். மேற்படி இருதயமேரிக்கு 3 மகன்கள் மற்றும் 2 மகள்கள் என்றால் 3 மகன்கள் மற்றும் 3 மகள்கள். ஜான்செல்வநாதன், லூர்துசாமி மற்றும் லாசர் ஆகியோர் இருதயமேரியின் மகன்கள் என்றால் சரிதான். மேரிஸ்டெல்லா, தேக்கலாமேரி என்றால் சரிதான், ஆனால் 3 மகள்கள் இருக்கிறார்கள். மற்றொரு மகளின் பெயர் என்ன என்றால் ஜெயமேரி ஆவார்.

4) மேற்படி ஜெயமேரி இருதயமேரியின் மகள் இல்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி இருதயமேரியின் சொத்துக்கள் அனைத்தும் அவரது வாரிசுகள் 5 பேருக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல, இருதயமேரி எங்களிடம் சொத்துக்களை கொடுத்துவிட்டார். மேற்படி இருதயமேரி எங்களிடம் சொத்துக்களை கொடுத்துவிட்டார் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். இருதயமேரிக்கு பாத்தியப்பட்ட சொத்துகளில் அவரது வாரிசான ஜான் செல்வநாதனுக்கு 5 ல் 1 பங்கு தான்

பாத்தியப்பட்டது என்றால் சரிதான். நான் வாதிக்கு கிரையம் செய்த வா.சா.ஆ.22 ஆவணத்தில் 6ல் 4 பங்கு என்று குறிப்பிட்டுள்ள விகிதாசாரம் தவறு என்றால் சரியல்ல. இருதயமேரியின் சொத்துக்களில் அவரது மற்ற வாரிசுகளுக்கும் உரிமை உண்டு என்றாலும் நான் எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.22 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களும் வா.சா.ஆ.22 ல் கண்ட சொத்துக்களும் உட்பிரிவு செய்யப்படாமல் ஒரே சர்வே எண்ணாக தான் உள்ளதா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கும், எனது மகள்களுக்கும், 1ம் பிரதிவாதியுடன் எந்த பேச்சுவார்த்தையும் இல்லை என்றால் சரிதான். எனக்கும் எனது மகனுக்கும் உள்ள பிரச்சனை தாவா சொத்து சம்மந்தமாக தான் என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் வாதி ஏக்கருக்கு 10 மூட்டை குத்தகை கொடுத்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளதற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை.

5) 1ம் பிரதிவாதிக்கு பிரிக்கப்படாத சொத்தையும் சேர்த்து வாதி குத்தகை சாகுபடி செய்து வருகிறார் என்று எனது மகனுக்கு பாகம் கொடுக்க கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எனது பெயரிலும், எனது மகள்கள் பெயரிலும் இலால்குடி, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண்.53/2017 என்ற பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதிக்கு அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை பிரித்துகொடுக்கவேண்டு என்று கேட்டும், அதனை மறுத்து வாதிக்கு எங்களுக்கு உரிய பாகத்தை விட கூடுதலான பாகத்தை கிரையம் செய்து

கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தும் பொய்யானது என்றால் சரியல்ல.